நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.139 / 2022**

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | சின்னாத்தாள் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சிங்காரவேல் | : | தொழில் | வீட்டு குடித்தனம் |
| கிராமம் | வடுகன் புதுப்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 56/2023 |

( 1வது எதிரி ஆஜர், 2 முதல் 6 வரை ஆஜர் இல்லை. எதிரிகள்தரப்பில் 317 குவிமுச பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

**<u>நாள் : 20.12.2023</u>**

**முதல் விசாரணை:**

1) நான் வடுகன் புதுப்பட்டியில் குடியிருந்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். .ஆஜர் எதிரியையும், மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும்.கடந்த 2018 ஆம் ஆண்டு மாதம், தேதி நினைவு இல்லை. புயல் காற்று மழையால் மரங்கள் அனைத்தும் சாய்ந்து கிடந்தது. எனது வீட்டுக்காரர் மாடு ஓட்டிகொண்டு சென்றுவிட்டார். எதிரி வசந்தா என்பவர் கீழே விழுந்து கிடந்த மரங்களை கழித்து கொண்டிருந்தார் மற்ற எதிரிகள் உடனிருந்தனர். நான் சென்று ஏன் மரங்களை கழிக்கிறீர்கள் என்றும் நான் 2 முறை இடத்தை அளந்துவிட்டேன், இந்த மரங்கள் என்னுடைய பாகத்தில் உள்ளது என்றும் கூறினேன். அதற்கு எதிரிகள் எங்க இடம், உனக்கு எங்க இடம் இருக்கு என்று என்னை குச்சிகாரி, தேவடியா என்று மரியாதை இல்லாத வார்த்தைகளினால் திட்டினார்.

2) எதிரி ஜெயச்சந்திரன் கட்டையால் தலையில் அடித்தார். சத்தம் கேட்டு அருகில் மாடு மேய்த்து கொண்டிருந்த எனது கணவர் அங்கு வந்தார்.தலையில் அடித்ததில் எனக்கு இரத்தம் அதிகமாக வந்தது. மற்ற எதிரிகளும் சேர்ந்துகொண்டு என்னை அடித்தார்கள். பின்னர் நாங்கள் பூதலூர் காவல்நிலையம் சென்றோம். அங்கிருந்து TMCH மருத்துவமனைக்கு சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது.

அது நாள் அளித்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும், போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை

1) எனது மகள் ஜான்சி ஆவார். 1ஆம் எதிரியின் அண்ணன்தான் என் மகளை திருமணம் செய்துள்ளார். எங்கள் ஊரில்தான் எனது மகள் உள்ளார். எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் கணேசன், துரைராஜ், ரெத்தினம், கருப்பன், கர்ணன் ஆகியோர் வீடுகள் உள்ளது. நாங்கள் இருப்பது வடக்கு தெரு, எதிரிகள் இருப்பது தெற்கு தெருவில் என்றால் சரிதான். எங்கள் வீட்டு வாசற்படி தெற்கு பக்கம் உள்ளது. சம்பவம் நடந்தபோது சுமார் 25 பேர் பார்த்திருப்பார்கள். நான், எனது கணவர், எனது மகன்கள் ஆகியோர் 1வது எதிரி சிவக்குமார், தங்கராஜ், ஜோஸ்பின் என்கிற அனுசுயா என்பவர்களை அடித்து காயபடுத்தியதாக என்னுடன் TMCH மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். சம்பவம் நடந்த உடனே பூதலூர் காவல்நிலையம் சென்று எனது கணவர், எனது மகன்கள் புகார் அளித்துவிட்டுதான் TMCH மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான்.

2) எதிரி ஜெயச்சந்திரன் என்பவர் கோயம்புத்தூரை சேர்ந்தவர், எதிரி வசந்தாவும் கோயம்புத்தூரில்தான் இருக்கிறார். ஜெயச்சந்திரன் அடித்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்பிருந்தே தூங்குமூஞ்சி மரத்திற்கு 70 வயது இருக்கும் என்றால் சரிதான். அந்த தூங்குமூஞ்சி மரம் விழுந்துதான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ஆம் எதிரி தங்கராஜீக்கு 80 வயது இருக்கும், 6ஆம் எதிரி அங்கம்மாவிற்கு 70 வயது இருக்கும். சம்பவத்தன்று வசந்தா கோயம்புத்தூரில் இருந்தார் என்றும், வழக்கிற்காக விறகு பொறுக்க வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ரத்தகறை படிந்த துணிகளை போலிசாரிடம் ஒப்படைத்தேன். TMCH மருத்துவமனையில் இருந்தபோது கையெழுத்து செய்து கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். எந்த போலிசார் புகார் என்னிடம் எழுதி வாங்கினார் என்றால் பெயர் தெரியவில்லை.

3) எனக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே மற்றும் சிடி ஸ்கேன் ஆகியவற்றை போலிசாரிடம் கொடுக்கவில்லை. சர்வே செய்த விபரங்களை போலிசாரிடம் கொடுத்துள்ளேன். இடம் சம்மந்தமாக நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை. 2வது எதிரி தங்கராசு என்பவர் எனது கணவர் மற்றும் 2 மகன்கள்பேரில் தஞ்சாவூர் சிவில் நிதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக

தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது. போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் என்னை ஒருமுறை விசாரணை செய்தார்கள், கையெழுத்து செய்தேன். 2வது எதிரி தங்கராசு எங்கள்மீது வழக்கு போட்டதால் நாங்கள் அவர்கள்மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை திட்டவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரிதான். எனது மகன் சம்பவத்தன்று கம்பெனிக்கு வேலைக்கு சென்றுவிட்டார். எனக்கு காயம் ஏற்பட்டதை கேள்விபட்டுதான் வந்தார் என்றால் அவர் வீட்டிலேயே இருந்தார். இடம் எங்களுக்கு சொந்தமானது என்ற ஆவணங்களை போலிசாரிடம் கொடுக்கவில்லை. எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)